உ

சிவமயம்



# நயினாதீவு நாகபூசணி அம்பாள் பெருவிழாக் காலத்தில் அளித்த

# நயினை அம்பாள் பாடல்கள்

துமிபளை

பருத்தித்துறை

2005.06.16

ஆக்கம்

நா. வரதராசா

## 01- தாயினும் நல்ல தயையுடையாய்

### பல்லவி

தாயினும் நல்ல தயையுடையாய் - இந்த
நாயினை கண் பாரம்மா நயினை யுறை நாயகியே. (தாயி)

### அனுபல்லவி

பேயினை ப்போல லைந்து நான்படுந் துன்பம்
காயினை கருணையால் கடிதெனவே நீங்க (தாயி)

### சரணம்

கள்ளம் எனும் வாழ்வு வாழ் ந்திடின பெருந்துன்ப
வெள்ளம் பெருகி நிறைந் தெங்கும் நணைந் தோடும்
பள்ளம் எனும் பவக் குழியிடை தள்ளாது
வள்ள லாய் வந்து என்னையும் ரட்சிப்பாய். (தாயி)

சுகம் என்ற ஒன்றையும் கண்டிலேன் யானும்
இகலோ கவாழ்வை இருளாக்க வம்பு செய்தேன்
தகவும் உடைய தாயே உன்னருள் பெற்றே
மகவுடைத்தாய் போல் மகிழ்ந்தே உலாவிட (தாயி)

## 02- தனையன் எனது வினைகள் களைய

### பல்லவி

தனையன் எனது வினைகள் களைய
தருணம் இது தான் அம்மா (தனை)

### அனுபல்லவி

மனைவி மாடு மக்கள் என்னும்
நினைவை நீக்கும் நீலாய தாட்சி (தனை)

### சரணம்

வற்றாது அருள் செய்யும் பொற்றாமரைப் பதத்தை
சற்றே னும் குறையாத பக்திகொள் ஏழைக்கு
பற்றே தும் இன்றி வாழ வழி செய்யும்
முற்றா நில வைஅணி நிமல னுடன் கூடி (தனை)

ஆட்சி பெருகும் நின் அருள் பெருகும் - அன்பர்க்
காட்சி யாகி வந்து காட்டுவாய் பேரோளியை
மீட்சி க்கும் வழி சேர்க்கும் நயினையின் நாகம்மா
சாட்சி யாகி நின் றென் பிழைவழி திருத்திடவே (தனை)

## 03- உன்னை அன்றித் தெய்வம் வேறுண்டோ

பல்லவி

உன்னை யன்றித் தெய்வம் வேறுண்டோ
மன்னும் நயினைப் பதி நாக பூசணித்தாயே (உன்னை)

அனுபல்லவி

உன்னும் அடியவர் உன் பதி அடைந்தே
பன்னுவர் பனுவல்கள் எண்ணுவர் நின்நாமம் (உன்னும்)

சரணம்

சந்ததமும் நின் சந்நிதி அன்பரால் நிறைந்திருக்கும்
எந்தாயே நின்அருள் ஏங்கியே வேண்டி நிற்க
முந்திய வினை தீர்க்க முன்னே வருபவளே
பந்திக் கும் பாசம் அறுத்து நற்கதிதர (உன்னும்)

முத்தி தரும் இன்ப முதற்பொருளே தேவி
சத்தியே சுயம்புவாய் நயினை அமர்ந்தவளே
எத்திக்குமே இருந்து சேர்ந்திடும் அடியவரின்
பத்தியை மெச்சியே நற் பதத்தினை வழங்கிடும் (உன்னை)

## 04 -அம்மா நாகம்மா

### பல்லவி

அம்மா நாகம்மா உன்னை நம்பினேன் நிதம்
அருள் தரவேண்டி நின்றேன் ........ (அம்மா)

### அனுபல்லவி

சும்மா இருந்திடச் சுகத்தினை அளித்திடும்
பெம்மா னுடன் கூடி நயினையில் உறைந்திடும் (அம்மா)

### சரணம்

படகது ஏறி நிந்தன் பாதம் பணிய வந்தோம்
இடரது முடக்கியே எழுந்திடச் செய்வாய்
கடலதின் துயரது இடைவந்து சேரினும்
உடனது வந்ததுமே உவகையைத் தந்திடும். (அம்மா)

கோடானு கோடி பக்தர் உன் கோயில் வாசல்
ஆடாது அசை யாது உன்னையே வணங்கி நிற்பர்
கோடாது நிமிர்ந்துமே தீர்ப்பளிக்கும் பாங்கை
கூடாது குறையாது பாடுவேன் என்நாவால் (அம்மா)

## 05 - அம்மா நின்மனம் கனியாதோ

பல்லவி

அம்மா நின் மனம் கனியாதோ – நயினை உறை
அம்மா நின் மனம் கனியாதோ (அம்மா)

அனுபல்லவி

இம் மாநிலத்தில் இனிதுறவே வாழ்ந்து
அம் மாதவரின் அம்பரம் சேர்ந்து விட (அம்மா)

சரணம்

ஒரு தரமாயினும் திரு முகங்காணவே
துணிவுற ஏங்கும் ஏழைக்காய் இன்றே
வருவாய் திருவருள் தருவாய் உன்பாதம்
பணிவாய் அடைய பெருமருள் தந்திட (அம்மா)
கண்ணின் நடுவே கருமணியாய் விளங்கி
துள்ளித் திரியும் உயிர்களைக் காப்பவளே
பெண்ணில் உயர்ந்த பெருநிதியே தாயே
அள்ளித் தரும் பெரும் அருள் மழையில குளிக்க (அம்மா)

## 06-தேவியைப் பணிவாய் மனமே

### பல்லவி

தேவியைப் பணிவாய் மனமே தினமும் - இப்
பாவியின் துயர் நீக்கி பதமதை நாடிட (தேவி)

### அனுபல்லவி

வாராது வறுமை சேராது மூப்பு பிணி
நேராது பிழை அவள் பேரது உரைத்ததுமே (தேவி)

### சரணம்

பூவினில் பொருள் தேடி அலைந்திடும் போதினில்
நாவினில் பிழை வரும் நலம் பல குன்றிடும்
பாவினில் உன் புகழ் பாடிட வேண்டி
கோவிலின் வீதியில் வலம் வரும் அருள் கேட்டு (தேவி)

அன்பருக் கன்பராய் ஆனவளே தாயே
என்பதை உருக்கிடும் எளியவளும் நீயே
தன்பகை விலக்கிட தயையளிப்பாய் அம்மா
வன்பகை அகன்றிட வழிசமைத்த நயினை (தேவி)

தங்க நிறம் கொண்டாய் தமிழே உருவானாய்
அங்கமெலாம் அரவணிந்து ஆதியவன் பாதியதாய்
குங்குமப் பொட்டொடு குமிழும் சிரிப்புடனே
சிங்கமதில் அமர்ந்து சீரெல்லாம் தருபவளே.

## 07- எந்த நேரமும் உந்தன்

### பல்லவி

எந்த நேரமும் உந்தன் நாமம் உரைத்தேன்
ஏன் வரத் தாமதம் அம்மா நாகம்மா

### அனுபல்லவி

அன்னையே கரையிலாக் கருணையின் நிறைவே
உன்தனை பணிந்துமே வழிபார்த்தே நின்றேன் (எந்த)

### சரணம்

உனை நினைத் தேங்கியே உகுத்தேன் கண்ணீர்
வினை தரும் துன்பம் எனும் சகதியில் வீழ்ந்து நின்றேன்
கனை கடல் அணித்திடும் நயினையின் நாயகியே
பனை உயர் துயர் வரினும் பயந்து விடாதிருக்க (எந்த)

அன்னையே முதற் பொருளே அகிலாண்ட நாயகியே
உன்னைப் போலன்றி உயர் தெய்வம் வேறில்லை
அன்பைப் பெருக்கும் அருளே பெருஞ்சுடரே
என்பை உருக்கியும் நின்பதம் சேர்க்க (எந்த)

**08- என்று நின் தேர் வரும்**

**பல்லவி**

என்று நின் தேர்வரும் இன்னொலி செவி புகும்
நன்றுள பதியாம் நயினையில் உறைபவளே

**அனுபல்லவி**

என்றும் என்னுள்ளத்திலே ஏகாந்த அறையினை
நன்றிது செய்துளன் நாடித் திறந்திடவே (என்று)

**சரணம்**

அம்பலம் ஆடிடும் கூத்தனின் துணைவியே
அம்புய இதய முன் ஆடலுக் குகந்தது
ஐம்புல னடக்கி யே ஆனந்த மாயிருக்கும்
செம்பு டை நெறியினை காட்டிடும் தாயே. (என்று)

## 09- எந்த நேரமும்

### பல்லவி

எந்த நேரமும் என்னையும் ரட்சிப்பாய்
கந்த ம்கமழும் நயினையின் பூசணியே (எந்த)

### அனுபல்லவி

சிந்தை அலைந்தேன் சிறுமதியால் உலைந்தேன்
சொந் தமிழந்தேன் சொல் பெயர்தான் அழித்தேன் (எந்த)

### சரணம்

உற்ற நேரத்தில் உறுதுயர் தீர்த்தனை
பற்ற வே உன் பாதம் பணித்தனை
சற்று மே நின் கருணை குறைத்திலை
பெற்ற தாயிலும் பெரியோய் ஆயினை (எந்த)

பந்த பாசங்கள் நிந்தனை தரும்
வெந்த புண்ணில் வேலினைப் பாய்ச்சிடும்
எந்த நேரமும் எமக்கிடமும் தரும்
வந்த உன் னருளினால் அனைத்தும் அகன்றிடும். (எந்த)

## 10-ஏது கோபமோ தேவி

### பல்லவி

ஏது கோபமோ தேவி
இரங்க வில்லையோ இன்னும் மனம் (ஏது)

### அனுபல்லவி

பாதுகாவல் ஏதுமின்றி - இப்
பக்தனையும் தவிக்கவிட்டாய் (ஏது)

### சரணம்

உந்தன் கடைக்கண் பார்வை இன்றி
எந்த வேளை அருள் கிடைப்பதாகும்
சொந்த பந்தம் நைந்த போதில்
நிந்த மாக நின் இணையடி தாராது (ஏது)

நாத ரூபி நயினை அம்மா
பேதம் நீக்கி நந்நிலையும் தருவாய்
ஓத நீர் போல் ஓங்கும் கருணையை
பாதம் பணியிலும் தெளிக்க ஒண்ணாது (ஏது)

## 11- எந்த ஜென்மமும் நான் மறவேன்

### பல்லவி

எந்த ஜென்மமும் நான் மறவே னுன்னை
நொந்த சமயமும் துணை செய்ததை யெண்ணி (எந்த)

### அனுபல்லவி

தாயவள் துணைக்கு யாது கைம்மாறு முண்டோ
சேயிவனை அணைத்து உள்ளொளி ஊட்டியதை (எந்த)

### சரணம்

என்னுயிர் தந்தவளே இன்னுயிரானவளே
முன்னம் அறியாத நற்றுணையானவளே
மன்னுயிர் அனைத்தையும் காத்து அருள்பவளே
அன்னையே உன் அருள் பெற்றே நித்தம் களித்ததை (எந்த)

கற்பனை க் கெட்டாத கடவுளென்றே இருந்தேன்
சிறபரனின் துணைவி தேவி தயாபரியே
உற்பவம் முதல் வந்த பவவினையை தானும்
கற்பூ ரமாக்கி எரித்துக் கரைத்ததனை (எந்த)

## 12- இன்னும் சோதனையோ

### பல்லவி

இன்னும் சோதனையோ – என் பாடறிந்து
இரங்கா திருத்தல் தகுமோ – அம்மா (இன்னும்)

### அனுபல்லவி

கன்னம் கடல்சூழ் நயினை பதியவளே
பொன்னஞ் சோதிப் பதங்கள் புகலடைந்தே (இன்னும்)

### சரணம்

குற்றமு டையேன் குண முடையயே னல்லேன்
பற்றுடன் வலம் செய்யேன் கோலமும் தான் புனையேன்
பொற் றிரு அடியார் குழாம் புக்கருள் செய்வாயெனில்
நற் றிரு வருள் தந்து இந் நாயேனை அடுத்திட (இன்னும்)

தேசம் பலவும் சென்றும் நின்னை தேடியலையவில்லை
நாசம் பலவும் செய்தேன் நலிந்தேன் மெலிவு கொண்டேன்
பாசம் அறுக்கும் வழி எதுவும் அறிந்திடாது
வேசம் கலைக்க உன் பதி நாடி வந்த எனக்கு (இன்னும்)

## 13- நீயே துணை என்று

### பல்லவி

நீயே துணை யென்று நாயேன் அடுத்து வரின்
தாயே ரட்சிக்க வேண்டும் - அம்மையே (நீயே)

### அனுபல்லவி

நோயா தியிடர்கள் ஓயா தலைக்கின்ற
மாயா வுலகத்தில் யாரை வேறடுப்பேன் (நீயே)

### சரணம்

உற்றார் துணை அவர்க்கு ஊரார் பலம் எனில்
முற்றாகப் பிழை இழைத்தே நெஞ்சினில் மமதை கொள்வார்
வற்றா வளம் கொள் நின்பேர் விளம்பிட
பொற்றேர் வரும் கதிர் தொடும் பனி போலகல (நீயே)

சூடுவேன் மலர் உன் பாதத் தாமரைக்கு
பாடுவேன் பல் பதிகம் உன்தனின் பெயரால்
தேடுவே ன்உன் அருள் அடியார் கூட்டமதை
நாடுவேன் நாளும் உன்னடி பணிந்திட. (நீயே)

## 14 -பெண்ணில் பெரிய தகையினளே

### பல்லவி

பெண்ணில் பெரிய தகையினறே – நின்றன்
எண்ணில் கருணையை என்னவென்றே சொல்வேன் (பெண்ணில்)

### அனுபல்லவி

எண்ணம் பல கொண்டு கலங்கு முன் அடியவர்க்கு
திண்ணம் எனும் பலம் அளித்திடும் தேவியாகும். (பெண்ணில்)

### சரணம்

மெய்யினால் முயற்சிகள் செய்திடினும் நின்
கைய்யினால் அந்நிலை நன்றதுவே யாகும்
பொய்விடா திருப்பின் கைவிடா யென்றும்
மைவிழி மாதவள் நயினையில் நாயகியாம் (பெண்ணில்)

ஆடாது என்றும் அசையாமல் நின்று
ஓடாது ஓடியும் உன்ஊர் வருவோர்க்கு
தேடாது செல்வம் அளித்திடும் தேவியே
சூடாது நில்லேன் பாமாலை நின்றன் மேல (பெண்ணில்)

## 15-நானறியாமலே.........

### பல்லவி

நானறியாமலே வழங்கிய நன்மைக்கு
யாது கைம் மாறுமுண்டே – தேவி (நானறி)

### அனுபல்லவி

ஊனறியாதே உயிர் செய்யும் நன்றி
வானறியாதே வளர்பயிர் - வாழ்வினில் (நானறி)

### சரணம்

தன்னறி வின்றி தவழும் மழலைக்கு
தாயென நின்றுமே தாங்குமாற் போலும்
முன்னறி வின்றி முனைக்கும் உபாயத்தை
முந்தியே அறிந்திடும் தந்தைபோல் காத்துமே (நானறி)

முன்னைப் பொருள் அறிவே மூவர்க்கும் மூத்தவளே
பின்னைப் பொழுது க்கும் பேரருள் அளிப்பவளே
தன்னை ப்பிரியாது பிரானுடன் உறைந்து
அன்னை க்குமேலான அன்னையாய் இருந்து (நானறி)

## 16- துன்பம் துடைத்த பெரும் பொருளே.

### பல்லவி

துன்பம் துடைத்த பெரும் பொருளே
உன்தன் அன்புக்கு நிகரில்லையே – அம்மா (துன்பம்)

### அனுபல்லவி

இன்பக் கடலமுதே இறைவியே நின்மேல்
முன்பக் திபூண்டிலன் ஆகிலும் நான் அடைந்த (துன்பம்)

### சரணம்

அண்டங்கள் காத்துமே விண்ணவர்காக – நீல
கண்டனை நினைத்தே குமரனை உற்பவித்தாய்
மண்டலத் தோர்வாழ கண்டனுடன் கூடி
எண்ணிலா ஆடல்கள் செய்வதளே தாயே (துன்பம்)

இலங்கைத்தீவின் வடமேல் பால் அமைந்த
இலங்கும் நயினை பதியில் உறைந்து நின்று
கலங்கும் அடியவர் கவலைகளும் தீர்த்து
துலங்கும் பெருமை சேர்தூயவளே – அம்மா (துன்பம்)

## 17 - மனமே கணமும்

**பல்லவி**

மனமே கணமும் மறவாதே - நீ
மாதவி யாள் அருளை என்றும் (மனமே)

**அனுபல்லவி**

வனம் புகினும் நாட்டின் இடைவைகினும் - பெரும்
தனம் வரினும் ஓங்கும் புகழ் வரினும்
மாதவியாள் அருளை .......... (மனமே)

சரணம்

புகழ் வரினும் அன்றி இகழ் வரினும் - மோக
மகிழ் வரினும் துன்ப வலை விழினும்
இகழ் வரினும் அதன் விளைவெய்த்தினும்
திகழ் நிறை தெய்வம் நீ அருள் செய்ததை எண்ணி (மனமே)

கற்றவரும் உடன் கல்லாதவரும் ஒன்றாய்
உற்றதுணை என உன்னடி வழுத்திட
பெற்றதாய் போல பேணியே பாலிக்கும்
நற்றவ நங்கையின் மலரடி சேர்ந்திட (மனமே)

## 18 - தேரேறி வருகின்ற ——

### பல்லவி

தேரேறி வருகின்ற நின் திருக்காட்சி பெற
பாரெல்லாம் கூடும் பக்த வெள்ளம் பெருகும். (தேரேறி)

### அனுபல்லவி

ஊரெல்லாம் காத்து உவப்புறச் செய்தவளே – உன்
பேரெல்லாம் கூறியே கீதம் இசைத்திட (தேரேறி)

### சரணம்

கதிரவன் குணதிசை எழுந்திடுமாப் போல்
பதியதாம் நயினையில் உறைந்திடும் தாயாள்
குதிரைகள் பூட்டிய தேரினில் ஏறியே – நற்
கதி தரும் உருவினில் அருளது சொரிந்திட (தேரேறி)

பக்தர்கள் கூடியே பாங்காய் வடம் பிடித்து
இத்தரை மீதினில் என் தவம் செய்தோம் என
பித்தரைப் போலவே நின் நாமங்களும் மொழிய
இத் திரு தேரது இசைந்தே உருண்டு வர (தேரேறி)

## பாடல்களைப் பாடக்கூடியவர் இரா கங்கள்

| | | |
|---|---|---|
| 1. | தாயினும் நல்ல தயையுடையாய் ........................ | வலச்சி |
| 2. | தனையன் எனதுவினைகள் ................................ | வாசஸ்பதி |
| 3. | உனையன்றித் தெய்வம் ................................... | சிவரஞ்சினி |
| 4. | அம்மா நாகம்மா ........................................... | சிந்துபைரவி |
| 5. | அம்மா நின்மனம் கனியாதோ ........................... | ரேவதி |
| 6. | தேவியைப் பணிவாய் மனமே ............................ | சுத்ததன்யாசி |
| 7. | எந்த நேரமும் உந்தன் .................................... | கேதாரகௌளை |
| 8. | என்று நின் தேர்வரும் ..................................... | பாகேஸ்வரி |
| 9. | எந்த நேரமும் என்னையும் ................................ | ரஞ்ஜனி |
| 10. | ஏதுகோபமோ தேவி........................................ | |
| 11. | எந்த ஜென்மமும் ........................................... | ஷண்முகப்பிரியா |
| 12. | இன்னும் சோதனையோ..................................... | சஹானா |
| 13. | நீயே துணை என்று ........................................ | கல்யாணி |
| 14. | பெண்ணில் பெரிய தகையினளே ......................... | மோகனம் |
| 15. | நானறியாமலே ............................................... | சாருகேசி |
| 16. | துன்பம் துடைத்த பெரும் ................................. | கல்யாணவசந்தம் |
| 17. | மனமே கணமும் ............................................ | கர். தேவகாந்தாரி |
| 18. | தேரேறிவருகின்ற ........................................... | |

கங்கை பிறிண்டேர்ஸ் 781 கே. கே. எஸ் றோட் சிவலிங்கப்புளியடி யாழ்.